887 Regd. No. M. 2797. (விலை அணா ஒன்று.)



VARTHAGA OOLIAN.

Trichinopoly. Monthly Journal of Commerce, Trade and Industry. August 1934

மலர் 3.] திருச்சினாப்பள்ளி ஆகஸ்டு-மீ -1934 [இதழ் 26

"வர்த்தக ஊழியன்" வருட சந்தா.

உள்நாட்டிற்கு ரூ. 1. வெளி நாட்டிற்கு ரூ. 1—8—0

மாதம் ஒன்றுக்கு விளம்பர விகிதம்.

அங்குலம் ஒன்றுக்கு ரூ. 1—0—0.
பக்கம் ஒன்றுக்கு ரூ. 15—0—0.
அரை பக்கத்திற்கு ரூ. 10. ராப்பர் பக்கத்திற்கு ரூ. 25.

முன்பணமில்லாத விளம்பரங்கள் பிரசுரிக்க முடியாது. நீடித்தகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதவும்.

ஆசிரியர்—திரு. டி. வி. கே. நாயுடு.

அட்டவணை.

செங்கோட்டையாவின் வீர மொழிகள் ...	31
உலக வர்த்தகம் ...	33
சாமான்களுக்கு ரயில்வே சார்ஜ் ...	34
வர்த்தக ஊழியன் ஆண்டு விழா ...	35
மார்க்கட்டு நிலவரம் ...	42
இந்திய வர்த்தகம் ...	44
திருச்சி ஜில்லா வியாபாரிகள் சங்கம் ...	44
மதிப்புரைகள் ...	45
தொழில் அபிவிருத்தி ...	46
Trade Secrets ...	48
United States Trade ...	49
Compulsory marking of goods ...	49
வர்த்தகக்குறி வழக்கு ...	50
நாணயமாற்றம் ...	50
Mysore Page ...	51
Varthaga Oolian Anniversary ...	53

OFFICE OF THE REGISTRAR ... BOOKS 15 AUG 1934 MADRAS

"VARTHAGA OOLIAN"

Annual Subscription.

Inland Rs. 1—0—0. Foreign Rs. 1—8—0.

Advertisement Tariff Per Insertion.

One inch Rs. 1—0—0. One Page Rs. 15—0—0
Half Page Rs. 10—0—0. Wrapper Page Rs. 25.

Advertisement without prepayment will not be considered. For further particulars write to the Manager.

HULLO! HULLO!!

HOW IS YOUR BUSINESS?
DON'T BE BROKEN HEARTED.
BROAD CAST YOUR BUSINESS.
MESSAGES THROUGH
"VARTHAGA OOLIAN"
AND PROPER IN TRADE

Apply to:—

Manager, "Varthaga Oolian"
TRICHINOPOLY, SOUTH INDIA.

T.R. ரெங்கசாமிநாயுடு

வர்ணம் & கண்ணுடி வியாபாரம்,

341, 42, பெரியகடைவீதி, திருச்சிறுப்பள்ளி.

எம்மிடம் பிரசித்திபெற்ற கம்பெனிகளின் நேர்த்தியான வார்னீஷ் வர்ணங்கள், முகம் பார்க்கும் நிலைக்கண்ணுடிகள், ஜன்னல் கண்ணுடிகள், கலர் கண்ணுடிகள்.

ராஜா ரவிவர்மாவின் அழகிய சித்திரப்படங்கள், ஜெர்மன் & இங்கிலீஷ் லேடி & சீனரி படங்கள், போஸ்டு கார்டு படங்கள், படங்களுக்கு வேண்டிய சட்டம் கண்ணுடிகள் கால் அங்குல வெளிச்ச கண்ணுடிகள் அட்டை, டின் பிளேட் வகைகள்.

திருவிழாக்களுக்கு வேண்டிய கலர் காகிதங்கள், வர்த்தி தகடுகள், கண்ணுடி மணி தினுசுகள், அசல் தங்கம் & வெள்ளி ரேக்குகள் முதலியவைகள் விலை சரசமாயும் நயமானதாயும் கிடைக்கும்.

ஒருமுறை ஆர்டர் கொடுத்து பாருங்கள்.

நித்திய வாலிபம்.

அதிகவிலையுயர்ந்தகூட்டுவர்க்கங்களைக் கொண்டு தயார் செய்யப்பட்ட எங்களுடைய

சக்தி சஞ்சீவினி மாத்ரைகளை

உபயோகித்துவந்தால் நித்திய வாலிபத்துடனும், வஜ்ர சரீரத்துடனுமிருக்கலாம். மஹாராஜாக்கள், இராஜாக்கள், ஜமீன்தார்கள், செல்வவந்தர்களால் உபயோகிக்கப்பட்டு வருகின்றன.

60-பொற் பூச்சு பூசின மாத்திரைகளடங்கிய புட்டி 1-க்கு ரூ. 12—0—0

இனம்! இனம்!!
"இன்பவாழ்க்கையிலடைந்த சக்தி"
கேட்போருக்கு இனமாகவும் தபாற்செலவில்லாமலும் அனுப்பப்படும்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26. பிராட்வே, மதருஸ்.

ஏஜண்டு:—T. G. கோபால் பிள்ளை,
மலைவாசல் தெப்பக்குளம், திருச்சி.

ஸ்ரீ நிலையம் பிரஸ்,

447, பெரியகடைவீதி, திருச்சினுப்பள்ளி.

1935-ம் வருட காலண்டர்கள்.

முந்துங்கள்! ஆர்டருக்கு முந்துங்கள்!!
வியாபாரிகளுக்குத் தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

பலமாதிரி அழகான விசித்திர கட்டிங் அட்டைகளில் தமிழ், இங்கிலீஷ், துலுக்கு, தேதிகளுடன் திதி, நக்ஷத்திரம், யோகம் எல்லா விசேஷ தினங்களுடன் தினசரி கிழிக்கக்கூடிய காலண்டர்கள் தயாராகிவிட்டது. பலவிடங்களிலிருந்தும் ஆர்டர்கள் வந்து கொண்டிருக்கின்றன. தேவையுள்ளவர்கள் முன்னுடியே ஆர்டர் கொடுக்கவும். இன்னும் தேவையான தமிழ், இங்கிலீஷ், தெலுங்கு எழுத்துக்களில் சிறு விசிடிங்கார்டு முதல் பெரிய வால்போஸ்டர் வரை அவரவர்கள் இஷ்டப்படி குறித்த காலத்தில் குறைந்த சார்ஜுக்கு பிரிண்டிங், பைண்டிங், ரூலிங், முதலியன சுத்தமாகச்செய்து கொடுக்கப்படும். ஒருமுறை ஆர்டர் கொடுத்துப் பரீக்ஷித்துப் பாருங்கள். ஸ்டேஷனரி சாமான்கள் எப்பொழுதும் விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

22—7—34-ல் திருச்சினுப்பள்ளி

"வர்த்தக ஊழியன்" பத்திரிகையின்

இரண்டாவது ஆண்டு விழாவில் தலைமைவகித்த

OFFICE OF THE REGISTRAR OF ...
15 AUG 19..
MADRAS

MR. V. S. SENGOTTAIAH MUDALIAR AVL.

பிரபல பஞ்சு வர்த்தகரும், போத்தனூர்
ஸ்ரீ சாரதா மில்ஸ் லிமிடெட் மானேஜிங் ஏஜண்டுமான
உயர்திருவாளர்

V. S. செங்கோட்டைய்யா முதலியார்

அவர்கள்.

"வர்த்தக ஊழியன்" வளர்ச்சியுற விரும்பினால் இன்றே உங்கள் சந்தாவை அனுப்பி வையுங்கள், மானேஜர்.

"நாணயம் நனி பேண்"



திருச்சினாப்பள்ளி
1934-ஷு ஆகஸ்டு-மீ

செங்கோட்டைய்யாவின் வீர மொழிகள்.

(Sengottaiah's Advice)

1934-ம்ஷு ஜூலைமீ 22உ திருச்சி முனிசிபல்பப்ளிக்ஹாலில் வெகு சிறப்பாக நடைபெற்ற நமது "வர்த்தக ஊழியன்" இரண்டாம் ஆண்டு நிறைவுவிழாவில் தலைமை வகித்த திரு. வி. எஸ். செங்கோட்டைய்யா முதலியாரவர்கள் "நமது நாட்டுமக்கள் மற்றபொருட்களுக்கு அயல் நாட்டினருடைய பண்டங்களை ஏராளமாக வாங்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமையிலிருக்கின்றார்கள்" என்று தமது சொற்பொழிவில் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தநிலைமையில் நம் நாடு இன்றும் இருந்து வருகிறதென்பதை எவரும் மறுத்தலரிது. இதற்குக் காரணங்கள் பலவாக இருக்கலாமாயினும், நம்நாட்டு வணிகம் சீர்பட்டு சிறப்புறததே முக்கிய காரணமாகும். முதலாவது வர்த்தகர்களில் பெரும்பாலார் வர்த்தக அறிவுப் பெருக்கம் பெற்றவர்கள் அல்லர். மேலும், பலர் கல்வி கல்லாது பழைய முறையில் வணிகத்தொழிலை நடத்திவருகின்றனர். பழைய கொள்கைகளை முறித்தெறியமனங்கொள்வதில்லை இரண்டாவதாக தம்மைச் சுற்றிலுமுள்ள உலகில் பரந்தபல் வேறு கண்டங்களில் வர்த்தகமுன்னேற்றம் எத்தகைய நிலையில் நடைபெறுகின்றதென்பதையும், பண்டமாற்றம், நாணய மாற்றம் முதலியன எவ்வகையில் நடைபெறுகின்றதென்பதையும்வர்த்தகர்கள்அறிந்து தக்கவாறு தங்கள் வணிகத்தொழிலைச் சீர்படுத்திக் கொள்ள முக்கிய கருவியாகிய பத்திரிகைகளைத் தருவித்துப் படித்தல் இன்றியமையாததாகும். மூன்றாவதாக வணிகர்கள் தங்கள் சந்ததியார்களை பழய வழக்க ஒழுக்கங்களின் படி தொழில்புரிய விடாமல், குறிப்பிட்டகாலமிவரை உயர்தரபாடசாலைகளிலோ, அன்றி கலாசாலைகளிலோகல்விகற்றபின்னர் வர்த்தகக்கல்விகற்கவசதிகள்வழங்கப்படின், நவீன முறைப்படி வர்த்தகஞ்செய்ய அவர்கள் பழகி வியாபாரமுன்னேற்றத்திற்குப்பொறுப்பாளியாவார்கள். இம்முத்துறையிலும் வர்த்தகர்கள் கவனஞ்செலுத்துதல் இன்றியமையாததாகும். மேலும், விவசாயம், தொழிலாளர், ரயில்வே, பாங்கு முறைகள், கூட்டுறவு, வரி முறைகள், காப்புவரி போர்டு முதலிய விஷயங்களை பற்றிய சொற்பொழிவு, தமிழ் பாஷையில் எங்கு நிகழ்த்தப்பட்டாலும் வர்த்தகர்கள் தவறாது சென்று அதனைக்கேட்டு அறிவு விளக்கம் பெறுதல்வேண்டும்.

திருவாளர் செங்கோட்டைய்யா அவர்கள் தமது பிரசங்கத்தில் ஜப்பானியர்கள் தொழில் சமர்த்திலும், வர்த்தகமுறையிலும் அபாரமான அபிவிர்த்தியடைந்து எவருக்கும் இணையற்றவர்களாய் இன்றைக்குங்கூட விளங்குகின்றார்களென்றும் அந்நாட்டினரை சகல தேசத்தினரும்கண்ணியமாகமதிக்கின்றார்களென்றும் நம் நாட்டில் இருப்பதைவிட ஜப்பானில் பத்திரிகாசிரியர்களுக்கு விசேஷ அந்தஸ்து இருக்கின்றதென்றும் தெரிவிக்கின்றார்கள். ஜப்பான் தேசத்தில் மட்டுமல்ல இந்தியாவைத் தவிர பிற எந்த தேசத்திலும் பத்திரிகாசிரியர்களுக்கு விசேஷ மதிப்புண்டு என்பது உலகம் அறிந்த உண்மை. இந்தியாவைத் தவிர பிறதேசங்கள் யாவும் வர்த்தகத் துறையில் முன்னேற்றம் பெற்றுவிட்டன, வர்த்தகக் கல்விக்கு ஏற்ற கல்லூரிகளும், சர்வ கலாசாலைகளும் ஏற்பட்டுள்ளன இந்தியாவைத் தவிர மற்ற எந்த தேசமும் அந்தக்குறிப்பிட்ட தேச வர்த்தகத்தில் அந்த தேச சர்க்கார் கண்ணுங்கருத்துமாகயிருந்து உள்நாட்டு வர்த்தகமோ அன்றி பிறநாட்டு வர்த்தக நட்புரிமைகளோ அன்றி தேசத்து விவசாய அபிவிர்த்தியோ அவற்றினைப்பாதுகாத்து தேச நலத்திற்கும், வர்த்தக கைத்தொழில் முன்னேற்றத்துக்கும்வசதியளித்துவருகின்றனர் அத்தகைய நிலையை தற்போது நாம் எதிர்பார்க்கக்கூடுமாவென்பது சந்தேகந்தான். இந்தியாவில் பிறதேசஅரிசிரகங்கள்கணக்கற்ற டன்கள் கப்பல்களில் வந்திறங்குவதை இந்திய சர்க்கார் தடுக்கமுடியாத நிலைமையில் இருப்பதாகச் சொல்லிக்கொள்ளும் போதும், பர்மாவிலிருந்து வெங்காயம் ஏராளமாக சென்னைக்கு கப்பலில் வந்திறங்கும்போதும் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் தேங்காய் வர்த்தகம் வலுக்கயிருக்கும்போதும் தென்னிந்தியாவிலிருந்து வடஇந்தியாவுக்கு தேங்காய், வாழை ஏற்றுமதி செய்ய வசதி அளிக்க இந்திய சர்க்காரும் ரயில்வே போர்டாரும் தயங்கும் போதும், வர்த்தகத்தில்பாதுகாப்பின்றி இந்திய வர்த்தகம் இன்றைக்கும்சிறுமைபெற்று பிறநாட்டின் நன்மதிப்புப்பெறுதற்கு நாம் ஏற்ற நிலைமையில் இல்லை என்பதை எவரும் மறுக்கமுடியாது என்றாலும், வணிகர்கள் யாவராயிருப்பினும் தங்கள் தங்கள் சுய அறிவைப்பெருக்கி கூடியமட்டும் நவீன முறையில் வர்த்தகஞ் செய்வதை பத்திரிகைகளை படித்து அவற்றின் மூலம் வர்த்தக உலகம் எத்தகையது என்பதை அறிதல் அவசியமாகும்.

"தொழில் விஷயமாகவோ, வியாபார விஷயமாகவோ தமிழ்நாட்டில் ஒரு சிலரிடம் பேசிப்பார்த்தால் அவர்களுக்கு ஜாயின்ட் ஸ்டாக் கம்பெனி தொழிற்சாலைகள் நடத்தும்விதம் கூட்டுறவு

ஸ்தாபனங்கள் ஆகிய இவைகளைப்பற்றி ஒன்றுமே தெரிவதில்லை" என்றுகூறி "ஆங்கிலப் படிப்பில்லாத தமிழர்கள் சுலபமாய் அறிந்து கொள்ளும் பொருட்டு எளிய நடையில் புஸ்தகங்களும் வியாசங்களும் பிரசுரிக்கவேண்டியது அவசியம்." என்று திரு. முதலியார் அவர்கள் தெரிவிக்கின்றார்கள். இதனை நாம் முழுமனதுடன் ஆமோதிப்பதுடன் ஒரு விஷயம் ஞாபகமூட்ட விரும்புகின்றோம். ஆங்கிலத்திலிருந்து தமிழில் வர்த்தக சம்பந்தமான நூல்களை எழுதுவதாயின் தமிழிலும் ஆங்கிலத்திலும் நூல் வல்லவராகவும், வணிகத்தில் அனுபவ ஞானம் உள்ளவராகவும், பண்ட மாற்றம், நாணய மாற்றம் ஆகிய இவற்றின் நுண்ணிய தத்துவங்களை நன்குணர்ந்தவராகவும் அறிவும் ஆற்றலும் படைத்தவர்களே இதற்கு முன்வரவேண்டும். விஷய ஞானம் பெற்ற வணிகர்கள் இதில் பங்கெடுத்துக்கொள்ளுவார்களென நம்புகிறோம். இது ஒருவரால் செய்யக்கூடிய காரியமும் அல்ல. ஆதலால் வர்த்தக சங்கத்தார் ஒரு லிமிடெட் கம்பெனியை இதற்காக நிறுவி அதன் மூலம் இதனை முற்றுப்பெற செய்விக்கலாம்.

வர்த்தகசங்கங்களை ஒவ்வொரு முக்கியமான வியாபார ஸ்தலத்திலும் நிறுவவேண்டியதின் அவசியத்தை திரு. முதலியார் அவர்கள் வற்புறுத்திக் கூறியிருக்கின்றார். மேலும் வர்த்தகர்கள் ஒன்றுகூடி கூட்டு முறையில் தங்கள் நிலைமையை பாதுகாத்துக்கொள்ளவேண்டியிருக்கின்றதென்றும் கூறியிருக்கின்றார். 1933-ஆம் வருஷம் ஜுலைமீ 23-உ "வர்த்தகஊழியன்" முதல் ஆண்டு நிறைவுவிழாவில் தலைமை வகித்து தமது பிரசங்கத்தில் செட்டிநாட்டு குமாரராஜா அறிவித்ததையும் இங்கு குறிப்பிட விரும்புகின்றோம். "ஒரு வியாபாரியும் தனிப்பட்ட நிலையில் நின்று தமக்கோ அன்றி பொதுவாகத் தொழிலுக்கோ ஏற்படக்கூடிய குறைகளை தீர்த்துக்கொள்ளமுடியாது. பல வியாபாரிகள் சேர்ந்து ஐக்கியமுறையில் கேட்பதின் மூலம் வியாபாரிகள் தங்கள் குறைகளை நிவர்த்தித்துக்கொள்ளமுடியும்" என்று செட்டிநாட்டு இளவரசரும் சொல்லியிருக்கின்றாரெனவே இந்தக்கூட்டுறவு முயற்சிவேண்டுமென்னும் உணர்ச்சியே மேன்மேலும் வலுப்பட்டு வருகின்றது. எனவே வர்த்தகர்கள் எல்லா ஸ்தலங்களிலும் ஒற்றுமையை வளர்த்தல்வேண்டும்.

புதிய அரசியல்முறையில் கைத்தொழிலும், வியாபாரமும் விருத்தி அடைவதற்கு ஏராளமான சௌகரியங்கள் ஏற்படுமென்று திரு. முதலியார் அவர்கள் எதிர்பார்க்கின்றார்கள். இந்திய வர்த்தக உலகமேஅத்தகையநிலைமையை ஆவலுடன் எதிர்பார்க்கின்றது. இறுதியாகஅன்னார் "வர்த்தக ஊழியனை" பெரிதும் வாழ்த்திஅதுசெய்யவிருக்கும் தொண்டை விளக்கி பத்திரிகையைப்போற்றி ஆதரிக்குமாறு வர்த்தகர்களை வேண்டிக்கொண்டதற்காகஅவருக்கு "வர்த்தகஊழியன்" நன்றிபாராட்டக்கடமைப்பட்டிருக்கின்றான். திரு. முதலியார் அவர்கள்தெரிவிக்கும்வண்ணம் தொண்டாற்ற போதிய வசதிகளை வர்த்தக நண்பர்கள் நமக்குஅளித்து "வர்த்தகஊழியனை" உற்சாகப்படுத்துவார்களென நம்புகிறோம்.

வர்த்தக நண்பர்களே

உங்கள் வர்த்தகம் விருத்தியடைந்து
நீங்கள் லாபமடைய விரும்பினால்
'வர்த்தகஊழியனில்'
விளம்பரம் செய்யுங்கள்.

பத்திரிகைகளின் வரவு.
(Publications Received)

London Chamber of Com-
Indian Mirror [merce Journal.
Indian Finance
Industry
Indo-Malaya Review
Mysore Chamber of Commerce
Guardian [Bullettin
Barclays Bank Monthly
Railway Herald [Review
The Produce Markets Review
Barclays Bank Monthly Trade
Indian Commerce [Cables
London Indian Chamber of
[Commerce Trade Notes
Standard Bank Monthly
Light of Asia [Review
The Parasakthi Magazine
Business Friend
Indian Magician
Review of Philosophy and
Celestial Messenger [Religion

அமிர்தகுணபோதினி
ஆனந்தபோதினி
ஆர்யதர்மம்
இந்தியா
ஈழகேசரி
குமரன்
குமாரவிகடன்
சுதந்திரம்
சுதேசநாட்டியம்
செங்குந்தமித்ரன்
தமிழ்நாடு
தமிழ்ச்செல்வன்
தமிழன்
திருக்குறட் குமரேச வெண்பா
திருவாங்கூர் அபிமானி
தொண்டுசெல்வம்
தேசநேசன்
நகரதூதன்
பர்மாநாடு
வம்பன்
விசித்திரன்
விஜயபாரதி
விநோதன்
விநோதநேசன்
விஜயபாஸ்கரன்
ஜகன்மோகினி
ஜ்யோதிஷ போதினி
ஹாஸ்யன்

உலக வர்த்தகம்.

(WORLD TRADE)

ஜிப்ரால்டர் (Gibraltar) ஜிப்ரால்டர் தேசத்தில் வர்த்தகம் ஒரே நிதானமாகயிருந்துவருகிறது. ஜப்பான் சரக்குகள் வந்துகொண்டிருக்கின்றன அமெரிக்கா மோட்டார் கார்களும் இறக்குமதி செய்யப்படுகின்றன. நிலக்கரிவிலை அதிகமாக ஆகவில்லை.

எகிப்து:—(Egypt) எகிப்து தேசத்தில் பருத்திசெப்டம்பர் மாதத்திலிருந்து ஜூன் மாதம் வரையில் 8,400696கண்டார்சு விளைவு சென்ற வருடம் 4,903.788 கண்டார்சு எற்றுமதி 7,791563 கண்டார்சு சென்றவருடம் 5,051,281 கண்டார்சு

கியூபா:–(Cuba) 1933-ம் வருடத்தில் கியூபா தேசத்து வருமானம் 1932-ம் வருடத்தை விட குறைவு எற்றுமதி 84,391,000 டாலர் சென்ற வருடம் 80,672.000 டாலர் இறக்குமதி 42,360,000 டாலர் சென்ற வருடம் 51,024,000 டாலர்

பேரு:—(Peru) பெரு தேசத்தில் மோட்டார்கார்கள் அதிகமாக இறக்குமதியாகின்றதாம். இவ்வருடம் ஜனவரி பிப்ரவரி மார்ச்சு மாதங்களில் 172 இறக்குமதி செய்யப்பட்டதாம். சென்ற வருடம் இதே காலத்தில் 9,

ஆஸ்திரேலியா:—(Australia) உலக உற்பத்தி சாமான்களில் வெள்ளி ஈயம், துத்த நாகம் இம்மூன்றும் ஆஸ்திரேலியா நாட்டில் அதிகமாக உற்பத்தியாகின்றன உலக உற்பத்தியில் 1933ம் வருடத்தில் ஈயம் 100-க்கு 20 வீதமும் துத்த நாகம் 100-க்கு 14 வீதமும் வெள்ளி 100-க்கு 6 வீதமும் உற்பத்தியாகியிருக்கின்றன.

மால்டா:—(Malta) 1934-ம் வருடம் மார்ச்சு மாதத்துடன் முடிவாகும் மூன்று மாதக்கணக்கின்படி மால்டா தேசத்தில் இறக்குமதி 886043 பவுன் சென்றவருடம் 777748 பவுன் எற்றுமதி 147175 பவுன் சென்ற வருடம் 94931 பவுன் உருளைக்கிழங்கும் வெங்காயமும் குறைவாக எற்றுமதி செய்யப்பட்டது அன்னிய நாடுகளிலிருந்தும் ஜவுளிகள் இறக்குமதி அளவை நிர்ணயித்திருப்பதின் காரணமாக ஜப்பான் தேசத்திலிருந்து இறக்குமதி கிடையாது.

ஆர்ஜன்டைன்:—(Argentine) ஆர்ஜன்டைன் தேசத்தில் சென்ற வருடங்களில் இறக்குமதி வர்த்தகம் மிகவும் குறைந்து போயிருக்கிறது 1929-ம் வருடத்தில் 1959 மிலியன் 'பைசாஸ் 1933-ம் வருடத்தில் 897 மிலியன் பைசாஸ்.

நியூஜீலண்டு:—(New Zealand) இவ்வருடம் ஜூன் மாதத்துடன் முடிவாகும் வருட அறிக்கையின் படி எற்றுமதி அதிகமாக செய்யப்பட்டிருக்கிறது. எற்றுமதி 4,91,4,000 பவுன் இறக்குமதி 2,67,03,000 பவுன் இதன் வித்யாசம் 22 மிலியன் சென்ற வருடம் 12 மிலியன் அதற்கு முந்தின வருடம் 10 மிலியன்.

சைனா:—(China) சைனா தேசத்தில் 1931-ம்வருடத்தில் வர்த்தகம் மிக உன்னத நிலைமையிலிருந்து வர வர குறைந்துகொண்டே வந்து விட்டது. 1934-ம் வருடத்தில் முதல் எற்றுமதியில் 100க்கு 12 வீதமும் இறக்குமதியால் 100க்கு 21 வீதமும் 1933-ம் வருடத்தை விட குறைந்து விட்டது.

மலேயா:–(Malaya) மலேயாநாட்டு பிரதேசங்களில் 1933–ம் வருடம் 1932 வருடத்தைவிட இறக்குமதியை விட எற்றுமதி அதிகமாகவே யிருந்திருக்கிறது. இறக்குமதி 1933-ல் 66 மிலியன் டாலர் சென்ற வருடத்தில் 70 மிலியன் டாலர் எற்றுமதி 106 மிலியன் டாலர் 81 மிலியன் டாலர் மேமாதத்தில் 41659 டன் ரப்பர் எற்றுமதி

நையாசாலாண்டு:—(Nyasaland) இந்த நாட்டில் இவ்வருடமுதல் மூன்று மாதங்களில் எற்றுமதி 71699 பவுன் சென்ற வருடம் 44071 பவுன் இறக்குமதி 101961 பவுன் சென்ற வருடம் 119363 பவுன் புகையிலை அதிகமாக உற்பத்தியாகி விற்பனையாகிறபடியினால் பணம் அதிகமாகயிருக்கின்றன.

ஆப்பிரிக்கா:—(South-west Africa) எப்ரல் மாதத்துடன் முடிவான நான்கு மாத வர்த்தகம் இத்தேசத்தில் குறைவாகவே யிருக்கிறது. எற்றுமதி 187,183 பவுன் சென்ற வருடம் 414436 பவுன் இறக்குமதி 298,637 பவுன் சென்ற வருடம் 264,957 பவுன் மழைக்குபின் சௌகர்யம் எற்பட்டிருக்கிறது.

பிரேஜில்:—(Brazil) பிரேஜில் தேசத்தில் பருத்தி அதிகமாக சாகுபடி செய்கிறது. இந்தியாவும் ஜப்பானும் ஒப்பந்தம் செய்துகொண்டதின் காரணமாக இந்ததேசத்து பருத்தி ஜப்பானுக்கு அதிகமாக எற்றுமதி செய்யப்படுமோ என்று பயப்படுகிறார்களாம். ஆனால் அந்ததேசத்திலிருக்கும்ஜப்பான்கான்சல் அந்ததேசத்து ஜனங்களுக்கு பருத்தி ஜப்பானுக்கு எற்றுமதி செய்யப்படுமென்று சொல்லியிருக்கின்றாராம்.

காம்பியா:—(Gambia) காம்பியா நாட்டில் நிலக்கடலை அதிகமாகப்பயிரிடப்படுகின்றன. இங்கிலாந்தும் பிரான்சும் அதிகமாக வர்த்தகம் செய்திருக்கின்றது. சென்ற வருடத்தில் எல்லா தேசங்களுக்கும் 67370 டன் எற்றுமதி செய்யப்பட்டது. 1932-ல் 37315 டன் இங்கிலாந்து மட்டும் சென்ற வருடம் 23902 டன் விலை 171057 பவுன் வாங்கியிருக்கிறது. தோல் மெழுகு முதலானவைகளும் இந்த தேசத்தில் உற்பத்தியாகின்றன.

ஜப்பான்:—(Japan) ஜப்பான்தேசத்தில் 1907-ம் வருடத்தில் முதல் முதலாக செலுலாய்டு பவுண்டன் பேனா ஹோல்டர்கள் செய்யப்பட்டன 1919-ம் வருடத்தில் 16 லட்சம் பொன் மதிப்புள்ள சரக்கு உற்பத்தி செய்யப்பட்டன 1920-ல் 55 லட்சம் ஆனால் 1933-ல் 20 லட்சம்

அமெரிக்க ஐக்கியநாட்டிலிருந்து உதவாத இரும்பை கிளாஸ்கோமாரு என்ற ஜப்பான் சப்பல் ஜப்பானுக்குச் சுமந்து கொண்டு செல்லுகின்றது. சென்ற 2 மாதங்களாக அமெரிக்காவிலிருந்து 32 கப்பல்களில் இரும்பும் ஈயமும் பஞ்சும், குண்டு மருந்துகளுக்கு உதவக்கூடிய சாமான்களும் ஜப்பானுக்கு வந்திருக்கின்றன. கிளாஸ்கோமாரு 'என்னும் கப்பலில் 8000 டன் பனமா ரயில்வேயைச்சேர்ந்த உதவாத இரும்புகளை டன் 45 ஷில்லிங்காக வாங்கி எற்றியனுப்பப்படுகின்றது. வரும் சாமான்களில் 7500 டன் ரயில் சக்கரங்களாயிருந்தன. விமானங்களையடிக்கும் பீரங்கிகளையும் மோட்டார் கார்களை பாக் செய்வது போல் பாக் செய்யப்பட்டு ஸான்பிரான்ஸிஸ்கோ வழியாய் ஜப்பானுக்குபோகின்றன.

சாமான்களுக்கு ரயில்வே சார்ஜுகள் (RAILWAY RATES)

The Railway do not accept responsibility for the correctness of these quotations a reference should be made to the Local Rate Advices & Foreign Rate Circulars issued by the S. I. Ry.)

சாமான்கள்	எங்கிருந்து	எந்த இடத்துக்கு	ரேட்டு மணங்குக்கு அ.	பை	எந்த தேதியிலிருந்து	ஷரா
மூங்கில்	ஆரணிரோடு	சீர்காழி	3	2	1-2-34	31-7-34 வரையில்
,,	காணியம்பாடி	,,	3	4	,,	,,
ஓலைகள்	பாண்டி	,,	2	2	,,	,,
உப்பு	அதிராம்பட்டணம்	பேராவூரணி	1	3	16-7-34	
கல்	மாம்பலப்பட்டு	சென்னை துறைமுகம்	1	6	,,	
,,	பல்லாவரம்	,,	1	0	,,	
,,	சிங்கப்பெருமாள் கோயில்	,,	1	6	,,	
,,	திருக்கோவலூர்	,,	1	6	,,	
,,	திருவண்ணாமலை	,,	1	6	,,	
ஓடுகள்	கொல்லம்	கூடலூர் ஜங்.	4	6	1-7-34	
,,	,,	சேலம் மார்க்கட்	4	5	15-7-34	விருத்தாசலம் மார்க்கம்
தேக்கு	ஆரியன்காவு	கல்லிடைக்குறிச்சி	1	7	,,	
,,	,,	சேர்மாதேவி	1	9	,,	
,,	,,	திருநெல்வேலி	2	0	,,	
,,	தென்மலை	,,	2	2	,,	
,,	,,	சேர்மாதேவி	1	10	,,	
,,	,,	கல்லிடைக்குறிச்சி	1	9	,,	
மிளகாய	மோக்கமே	எர்ணாகுளம்	25	11	10-6-34	
பருத்தி	திருப்பூர்	பாட்னீரா	36	6	2-7-34	
காலிபாரல்	நாகப்பட்டணம்	காக்கினாடா	8	4	2-6-34	
தான்யங்கள்	சென்னை	திருப்பத்தூர்	0	8	1-7-34	
,,	திருப்பத்தூர்	பெங்களூர்	4	2	,,	
உருளைக்கிழங்கு	மேட்டுப்பாளையம்	பெங்களூர்	8	4	15-6-34	
,,	,,	சென்னை	7	6	,,	
ஓடுகள்	பெரோக்	எல்லூர்	8	0	,,	
,,	,,	ராஜமகேந்திரம்	8	0	,,	
ஸ்லேட்சட்டம்	கல்லாயி	சித்தூர்	10	9	,,	
,,	,,	சென்னை	9	8	,,	
தான்யங்கள்	நியூடெல்லி	படகாரா	15	1	1-8-34	
,,	,,	கள்ளிக்கோட்டை	14	10	,,	
,,	,,	கண்ணனூர்	15	4	,,	
,,	,,	எர்ணாகுளம்	15	0	,,	
,,	,,	தலைச்சேரி	15	2	,,	
தேக்கு	பெரோக்	சித்தூர்	8	0	1-6-34	
,,	கல்லாயி	,,	8	0	,,	
,,	ஒலவக்கோடு	,,	8	0	,,	
ஓடுகள்	பெரோக்	காக்கினாடா	6	10	1-7-34	
,,	,,	தூணி	8	6	15-5-34	
,,	கல்லாயி	காக்கினாடா	6	10	1-7-34	
சட்டங்கள்	ஒல்லூர்	வேட்டபாலமு	13	1	1-6-34	
,,	திருச்சூர்	,,	13	1	,,	
சோப்	எர்ணாகுளம்	காட்பாடி	8	3	1-5-34	
தான்யங்கள்	காக்கினாடா	கோயம்புத்தூர்	9	5	1-6-34	
,,	,,	மங்களூர்	8	5	,,	
,,	,,	பாலக்காடு	8	11	,,	
,,	,,	பொள்ளாச்சி	9	8	,,	
,,	,,	திரூர்	6	10	,,	
,,	மசூலிப்பட்டணம்	மங்களூர்	8	5	,,	
,,	,,	படகாரா	7	1	,,	
,,	,,	கள்ளிக்கோட்டை.	6	10	,,	
,,	,,	கண்ணனூர்	7	4	,,	
,,	,,	கோயம்புத்தூர்	9	5	,,	

OFFICE OF THE REGIS 15 AUG19 DRA

வர்த்தக ஊழியன் ஆண்டு விழா.

"வர்த்தக ஊழியன்" இரண்டாவது ஆண்டு விழா கொண்டாட்டம் ஜுலை மாதம் 22வ ஞாயற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு மேல் திருச்சினுப்பள்ளி முனிசிபால் பப்ளிக் ஹாலில் மிகவும் விமரிசையாக நடைபெற்றது பலவர்த்தகர்களும் பிரமுகர்களும் வந்திருந்தார்கள் முக்கியமாக சென்னிமலை திரு. வி. எஸ். முருகேச முதலியார், கோயம்புத்தூர் திரு. எம். எஸ். கணேச அய்யர், கரூர் திரு. வேம்பு அயயர், திருப்பூர் திரு. டி. ஆர். சுந்தரம் பிள்ளை, ஸ்ரீரங்கம் திரு. ஆர். வி. பழனிசாமி பிள்ளை, திருச்சினுப்பள்ளி ஜில்லா வியாபாரிகள் சங்கம் பிரசிடெண்டு திரு. பொ. அந்தோணியா பிள்ளை ஷை சங்க காரியதரிசி திரு. லெ. அளகர்சாமி நாயுடு முனிசிபால் ஆபீசு மானேஜர் திரு. வி. எஸ். லோகநாத பிள்ளை மாஜி முனிசிபால் கவுன்சிலர்கள் திருவாளர்கள் எ. ராமசாமி தேவர் டி. ஆர். வேணுகோபால் செட்டியார், ஜே. எஸ். நரசிம்மலு நாயுடு, டி. ஆர். கோபால் ராவ், பி. ஆர். நாராயணசாமி செட்டியார், நல்லப்ப முதலியார், சின்னு முதலியார், ராமசாமி முதலியார், எம். எஸ். மாரியப்ப முதலியார்.

கோயம்புத்தூர் ஜில்லா, போத்தனூர், ஸ்ரீசாரதா மில்ஸ், மானேஜிங் ஏஜண்டும் பிரபல பஞ்சுவர்த்தகருமான உயர் திருவாளர் வி. எஸ். செங்கோட்டையா முதலியார் தலைமைவகித்தார்.

கடவுள் வணக்கத்திற்கு பின் வர்த்தக ஊழியன் பத்திராதிபர் திரு. டி. வி. கே. நாயுடு தலைவருக்கு வரவேற்பு பத்திரம் வாசித்துக் கொடுத்தார். திருச்சி ஜில்லா வியாபாரிகள் சங்கத்தின் சார்பாக தலைவருக்கு வரவேற்பு பத்திரமும் "வர்த்தக ஊழியன்" ஆசிரியர் திரு. டி. வி. கே. நாயுடுக்கு வாழ்த்து பத்திரமும் சங்க காரியதரிசி திரு. லெ. அளகர்சாமி நாயுடு அவர்களால் வாசித்து கொடுக்கப்பட்டது மேற்படி பத்திரங்களுக்கு வந்தனங்கள் முறையே அளிக்கப்பட்டன.

"வர்த்தக ஊழியன்" பத்திரிகையின் இரண்டாம் ஆண்டு அறிக்கையை மானேஜர் திரு. டி. என். சுந்தரராஜலு நாயுடு வாசித்தார் பின்னர் வருடபூர்த்திக்கு அனுப்பப்பட்ட வாழ்த்து கடிதங்களை வாசிக்கப்பட்டது.

தலைவர் தமது முகவுரைபிரசங்கத்தை பின்வருமாறு பேசினார் :—

பெரியோர்களே !

வர்த்தக உலகில் பெருங்கீர்த்தியும் அனுபவமும் ஆராய்ச்சியும் நிறைந்த அறிவிற்சிறந்த பெரியார் பலரிருக்க இவ் விழாவிற்கு என்னைத்தேர்ந்தெடுத்ததின் காரணம் தெரியவில்லை. மேலும் உயர்ந்த பதவியும், சிறந்த ஞானமும், முதிர்ந்த அனுபவமும் வாய்ந்த **செட்டி நாட்டுக் குமார ராஜா எம். ஏ. முத்தைய செட்டியார் அவர்கள்** சென்ற ஆண்டில் செய்த இப்பெரும் பணியை என்னைச் செய்யும்படி கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள். இப்பெருங் கௌரவத்தை எனக்களித்ததற்கு என் மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகின்றேன்.

பூர்வீக இந்தியாவின் செல்வநிலையைப்பற்றி செட்டி நாட்டு குமார ராஜா அவர்கள் வெகு அழகாகவும் விரிவாகவும் கூறியிருக்கின்றார்கள். விவசாயத்தில் மட்டுமல்லாமல் கைத்தொழிலிலும் வியாபாரத்திலும் இந்தியா தேசம் தலைசிறந்து விளங்கிற்று. சிற்சில காரணங்களால் அந்நிலைமாறி மூலப்பொருள்களை மட்டும் உற்பத்தி செய்கிறோம். மற்ற பொருட்களுக்கு நமது நாட்டு மக்கள் அயல்நாட்டினருடைய பண்டங்களை ஏராளமாக வாங்கவேண்டிய துர்பாக்கியமான நிலையிலிருக்கின்றார்கள். இக்கஷ்டத்திலிருந்து கூடிய சீக்கிரத்தில் தப்பும் பொருட்டு நமது நாட்டு மூலப்பொருள்களை நமது நாட்டிலேயே செயற்கைப் பண்டங்களாக மாற்றி இதன் மூலம் அநேக கோடி மக்களின் க்ஷேமலாபம் அதிகரிக்கும்படி செய்ய வேண்டுமென்று நமது தேசபக்தர்களும், செல்வநூல் பண்டிதர்களும் பல வருடங்களாக வற்புறுத்தி வருகிறார்கள்.

மகா யுத்தம் நடந்து கொண்டிருக்கும் போதே இந்திய சர்க்காருக்கு இக்கருத்தின் நுட்பம் விளங்கி சர். தாமஸ் ஹாலண்டு அவர்களின் தலைமையில் தொழில்கள் கமிஷன் (Industrial Commission) ஏற்படுத்தினார்கள் என்பது யாவருக்கும் தெரிந்த விஷயம். 1918-ஞூத்தில் வெளிவந்த யாதாஸ்தில பல முக்யமான சிபார்சுகள் செய்யப்பட்டன. உதாரணமாக ரஸாயன ஆராய்ச்சிகளை அபிவிருத்தி செய்து நவீன முறைப்படி பெரிய தொழில்களை நமது தேசத்தில் ஸ்தாபிப்பதற்கு பற்பல சௌகரியங்கள் இருப்பதென விளங்கிற்று. அடுத்தபடியாக தேசமெங்கும் ஆங்காங்குள்ள நீர் வீழ்ச்சிகளைக்கொண்டு மின்சார சக்திமூலம் தொழிலபிவிருத்தி செய்வதற்கு வேண்டிய வசதிகள்தேட முயற்சிகள் செய்யப்பட்டன. எவ்விதப் பொருளாதார முன்னேற்றத்திற்கும் நிலவளம் நீர்வளம் முழுவதையும் உபயோகிப்பது முக்யமென்பதை இந்த அறிக்கையினுல் மகா ஜனங்களும் சர்க்காரும் ஒருங்கே ஒத்துக்கொண்டார்கள். அதன் பிறகு விவசாயம், தொழிலாளர், ரயில்வே, பாங்கு முறைகள், கூட்டுறவு, வரிமுறைகள், காப்புவரி போர்டு (Tariff Board) ஆகிய கமிஷன்களும் கமிட்டிகளும் சென்ற சிலவருஷங்களாக நமது தலைவர்களின் கவனத்தைப் பெரிதும் கவர்ந்து வருகின்றன. இவைகளை பற்றிய ஞானம் சட்டசபைப் பிரதிநிதிகளும் பத்திரிகாசிரியர்களுக்கும் மட்டும் இருந்தால் போதாதென்பதை உணர்ந்து சென்னை சர்வகலாசாலை அதிகாரிகள், பட்டதாரிகள் மூலம் சிற்சிலநகரங்களில் தாய் பாஷையில் சொற்பொழிவுகள் நடக்கும்படி ஏற்பாடு செய்து வருகின்றார்கள். ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் இவ்வித இயக்கங்கள் சென்ற இரண்டொரு தலை முறைகளாக நடந்து வருகின்றன. எதிர்பார்த்த பலன்களையும் கொடுத்திருக்கின்றன.

நமது பாமரமக்களைவிட அந் நாட்டுப் பாமரமக்கள் எவ்வளவோ மடங்கு ஆற்றலிலும் அறிவிலும் சிறந்தவர்களாக இருக்கிறார்கள் எனத்தெரிகிறது. இதையெல்லாம் பல வருஷங்களுக்கு முன்னரே தெரிந்த "கோகலே" பெரியார் நமது தேசமெங்கும் ஆரம்பக்கல்வி கட்டாயம்பரவவேண்டுமென்று வற்புறுத்தி மறைந்தார். இதனவசியத்தைப் பல ஆண்டுகளுக்கு முன்னுணர்ந்த ஜப்பானியர்கள் அபாரமான அபிவிருத்தியடைந்து தொழில்சமர்த்திலும் வியாபார முறையிலும் இணையற்றவர்களென்று இன்றைக்குச் சகல நாட்டினரும் மதிக்கிறார்கள். அவ்விடத்திய சமாச்சாரப் பத்திரிகைகளைக் கோடிக் கணக்கான மக்கள் வாங்கி வாசிப்பதாகத் தெரிகின்றது. நம் நாட்டில் இருப்பதைவிட பத்திரிகாசிரியர்களுக்கு ஜப்பானில் விசேஷ அந்தஸ்திருக்கின்றது. உதாரணமாக, ஏழு ஜப்பானிய பத்திரிகாசிரியர்கள் ஜப்பான் கேபினெட் மெம்பர்களின் காரியதரிசிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற செய்தி சென்றவாரத்தில் வெளியாயிருக்கிறது.

ஆகவே எந்த வகையில் பார்க்கினும் நம் நாடு பின்னடைந்த நாடாகத்தான் இருக்கின்றது. நீர்வளம், நிலவளம், மலைவளம் ஆகிய சகல வசதிகளும் நிரம்பிக்கிடக்கும் நம் நாட்டில் செல்வ அபிவிருத்திக்கு எவ்வளவோ இடமிருக்கின்றது. அயல் நாடுகளில் சுற்றுப் பிரயாணஞ் செய்து திரும்பியிருக்கும் இந்தியத் தலைவர்கள் சொல்லியிருப்பதை கவனித்தால் இயற்கையாயுள்ளபுத்திகூர்மையில் நம்நாட்டினர் பிற நாட்டினருக்கு எவ்வகையினும் பின்னடைந்தவரல்லர் என்று அறிகிறோம். இவர்களுக்கெல்லாம் நவீனத் தொழிற்கல்வி கிடைக்கும்படி புதிய புதிய இயக்கங்கள் தோன்ற வேண்டும். இத்துறையிவ் பத்திரிகைகள் செய்யக்கூடிய சேவை அதிகமுண்டு.

தொழில் விஷயமாகவோ, வியாபார விஷயமாகவோ தமிழ் நாட்டில் ஒரு சிலரிடம் பேசிப்பார்த்தால் பெரும்பாலோருக்கு (Joint Stock Company) ஜாயின்ட் ஸ்டாக்கம்பெனி, தொழிற்சாலைகள் நடத்தும்விதம், கூட்டுறவு ஸ்தாபனங்கள் ஆகிய இவைகளைப்பற்றி ஒன்றுமேதெரிவதில்லை. இதைப்பற்றிக்குற்றம் கூறவரவில்லை ஆனல் இவைபோன்றவைகளில் நம்மவற்கு விஷய ஞானம் வேண்டுமென்பதை வற்புறுத்தவே நான் சொல்ல நேர்ந்தது. இவைகளில் நிபுணர்களாயிருப்போர், ஆங்கிலப் படிப்பில்லாத தமிழர்கள் சுலபமாய் அறிந்து கொள்ளும் பொருட்டு, எளிய நடையில் புஸ்தகங்களும், வியாசங்களும் பிரசுரிக்க வேண்டியது அவசியம். இதற்காக ஆங்கிலத்திலுள்ள பொருளாதார நூல்களை மொழிபெயர்த்தல் வேண்டும். செல்வ நூல்கள் தமிழில் நாளுக்கு நாள் அதிகமாகப் பிரசுரமாவது ஓர் நற்சகுன மென்றே நம்புகிறேன்.

வர்த்தக சங்கம் (Chamber of Commerce) ஒவ்வொரு முக்கியமான வியாபார ஸ்தலத்திலும் ஏற்படுத்தி அதனல் வியாபாரிகளுக்குள் ஏற்படும் விவகாரங்களை நீக்கியும், வியாபாரிகளுக்குள் ஒற்றுமையை வளர்த்தும், வியாபார அபிவிருத்தியயைநாடுவதற்கும், வர்த்தக சங்கங்களில் நடை பெறும் விஷயங்களை எடுத்துப் பிரசுரித்தும். அந்நிய நாட்டு வர்த்தகக் கூட்டங்களில் நடக்கும் விஷயங்களை விளக்கியும் தருதல் **வர்த்தகஊழியன்** க்டமையாகும் முற்காலத்தில்தனிப்பட்ட முறையில் வியாபாரத்தை அவரவர் நடத்தி வந்தார்கள். இக்காலத்திய போட்டி உலகத்தில் இம்முறையானது அவ்வளவு பயன் தரத்தக்கதன்று. வியாபாரிகள் ஒன்றுகூடி கூட்டுமுறையில் தங்கள் நிலைமையைப்பாதுகாத்துக் கொள்ள வேண்டியிருக்கின்றது. கிரோசின் எண்ணெய், பெட்ரோல் இவைகள் இந்தியா முழுவதும் சப்ளை செய்யப்படும் அழகான ஏற்பாடுகளை கவனித்தால் இதன் உண்மை விளங்கும் பெரும்படியான வியாபாரமாயிருந்தாலும் சரி குடிசைக் கைத்தொழில்களாயிருந்தாலும்சரி நாணயமாய் நடந்தவரையில் தான் அவைகள் மேம்படும். நம்நாட்டுப் பத்திரிகைகள் பெரும்பாலும் அரசியல் விஷயங்களைப் பற்றி எழுதுகின்றன. வியாபார வளர்ச்சிக்கு அரசியல் முன்னேற்றம் அவசியமாயிருப்பினும், அரசியலிலுள்ள ஞானம் வியாபாரத்துறையிலும் ஏற்பட வேண்டுமென்பதை யாரும் மறுக்க முடியாது. இவைகளின் சம்பந்தா சம்பந்தங்களை விளக்குவதுடன் அயல்நாட்டுவியாபாரம் நூதன கைத்தொழிலபிவிருத்தி இன்சூரன்ஸ் நயமான முறையில் கம்பெனிகளை ஸ்தாபித்தல் வெள்ளி தங்க முறையின் பலாபலன் வருமான வரி புதிய போக்கு வரவு சாதனங்கள் ஆகியவைகளைக் குறித்து அடிக்கடி சஞ்சிகையில் வியாசங்கள் வெளியிட வேண்டும்,

இந்த நோக்கங்களைக்கொண்டு சென்ற இரண்டு ஆண்டுகளாக **வர்த்தகஊழியன்** செய்துவரும் சேவை மிகவும் பாராட்டத்தக்கது திரிசிரபுரத்திலிருக்கும் வியாபாரிகள் ஒரே மனதாக இதற்கு ஆதரவு அளித்து வருவதும் போற்றத்தக்கதே.

மற்றும் நம் **வர்த்தகஊழியனை** ஆதரித்துபிரதேச வியாபாரப் பத்திரிகைகள் போல அறிவும் ஆராய்ச்சியும் நிறைந்ததாகவும் தொழிலதிசயங்களை விவரித்தும் உண்மை நிலையில் எழுதப்பட்ட விளம்பரங்கள் மூலியமாகவும் தமிழ் மக்கள் பெரும்பாலோர் இதை வாங்கிவாசிக்கத்தகுந்த அழகான ருசிகரமான பத்திரிகையாக விளங்கவேண்டுமென்று விரும்புகிறேன். **வர்த்தகஊழியன்** நீடூழிகாலம் பொது நல சேவை செய்யும்படி ஆண்டவன் அருள்புரிவாராக!

புதிய அரசியல் முறையில் கைத்தொழிலும் வியாபாரமும் விருத்தி அடைவதற்கு ஏராளமான சௌகரியங்கள்கிடைக்குமென்று நம்பப்படுகின்றது. இந்த விசாலமான எதிர்காலத்தைத் தக்கபடி தமிழ் மக்கள் பொது நலத்திற்கு பயன் படுத்திக்கொள்வதற்கு வேண்டிய ஆற்றலும ஆராய்ச்சியும் பரவுமென்று நம்புகிறேன். நமது தேசத்தவர்களின் அபாரசக்திக்குத்தகுந்த சாதனங்களும் சௌகரியங்களும். கிடைக்கும்போது அவைகளின் மூலம் முழுப்பலனை அடைந்து நமது நாடு இதர நாகரீக தேசங்களுடன் சரிசமமான அந்தஸ்துவகிக்கும் நறகாலம் சீக்கிரம் வருகிறதென்பது நிச்சயம்.

முத்துக் குளிப்ப தொரு தென்
கடலிலே
மொய்த்து வணிகர் பல நாட்டி
னர் வந்தே
நத்தி நமக்கினிய பொருள்
கொணர்ந்து
நம்மருள் வேண்டுவது மேற்
கரையிலே.

* * *

காசி நகர்ப்புலவர் பேசு முரைதான்
காஞ்சியிற் கேட்பதற்கோர் கருவி
செய்வோம்.
பட்டினிலாடையும் பஞ்சி லுடையும்
பண்ணி மலைகளென வீதி குவிப்
போம்.

* * *

ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம்
செய்வோம்
ஆலைகள் வைப்போம் கல்விச்
சாலைகள் வைப்போம்
நடையும் பறப்புமுணர் வண்டிகள்
செய்வோம்
ஞாலம் நடுங்க வரும் கப்பல்கள்
செய்வோம்.

திருவாளர்கள் எம். எஸ். ஆர். சந்திரன் டி. பி. வேதாசலம், பி. ஆர். நாராயணசாமி செட்டியார், ஜே. எஸ். நரசிம்மலு நாயுடு, ராமசுப்பிரமணியம் முதலானோர் பத்திரிகையின் அவசியத்தைப் பற்றியும் வர்த்தக முன்னேற்றத்திற்கான வழிகளைப் பற்றியும் பேசினார்கள்.

திரு. டி. ஆர். சுந்தரம் பிள்ளை அவர்களால் வந்தனோபசாரம் சொல்லப்பட்டது பின்னர் சந்தனம், கற்கண்டு, புஷ்பம், தாம்பூலம், எல்லோருக்கும் கொடுக்கப்பட்டபின் கூட்டம் கலைந்தது புகைப் படம் பிடிக்கப்பட்டது.

கலர் புடவைகள்

பல தினுசுகளும் வெள்ளை தினுசுகளும் தயார் செய்கிறோம். விலைகள் மலிவாகவும் கொடுக்கப்படும், ஒரு முறை வியாபாரம் செய்து பார்க்கவும்.

ரா. தி. பு. மு. சாமி நாத செட்டியார்
ஜவுளி வியாபாரம் 46 நடுத்தெரு,
ஜெயங் கோண்ட சோழபுரம்.

குறைந்த சேலவில்
நிறைந்த லாபம் பேற விரும்பினல்
வர்த்தக ஊழியனில்
விளம்பரம் செய்யுங்கள்.

திரிசிரபுரம் "வர்த்தக ஊழியன்" இரண்டாவது ஆண்டு விழாவில்
தலைமை வகிக்கும் உயர் திருவாளர்

V. S. செங்கோட்டைய்யா முதலியார்

— அவர்களுக்கு சமர்ப்பித்த —

வரவேற்புப் பத்திரம்.

கொங்குவளநாட்டு கோமானே வருக!

இன்று நடைபெறும் விழாவிற்குத் தலைமைவகிக்கும் பதவியை தயைகூர்ந்து ஏற்றுக்கொண்டு இங்கு மனமுவந்து வீற்றிருக்கும் தங்கள் வரவு நல்வரவாகுக.

பேரன்புடைய பெரியீர்!

தங்கள் குலத்திற்கே திலகம்போல் விளங்கும் தாங்கள் கோயமுத்தூர் ஜில்லாவிலும், மதுரை, பெங்களூர் முதலிய இடங்களிலுமுள்ள தங்கள் வர்த்தக நிலையங்களில் உண்மைக்கும், நேர்மைக்கும் ஒப்பாக நடத்திவரும் வர்த்தகப் பெருமையைக்கேட்டு களிபேருவகையடைகிறோம். வர்த்தகத்தில் முன்னணியிலிருப்பதல்லாமல் ஸ்தலஸ்தாபனங்களிலிருந்தும், ஐக்கிய இயக்கத்தில் ஈடுபட்டும் பொதுஜன நன்மைக்காத் தாங்கள் சலியாது உழைத்து வருவதை சாலவும் பாராட்டுகிறோம்.

சாந்தகுண சீல!

அன்பும் அருளும் நிரம்பப்பெற்ற தாங்களும், தங்கள்குடும்பத்தாரும் ஏழைமக்கள் மீது காண்பித்துவரும் காருண்யமும், தயையும் மிகவும் போற்றத்தக்கது. மேலும் தாங்கள் கோவில்களின் பரிபாலன விஷயமாகவும், கோவை சிசுசம்ரக்ஷண நிலையத்திற்கும், சென்னிமலை மருத்துவ விடுதிக்கும், சென்னை ஆதிதிராவிடர் பொது மன்றத்திற்கும் செய்திருக்கும் அறங்களைப்பற்றி கேட்டு மகிழ்வடைகிறோம்.

அருங்குணங்களமைந்த அண்ணலே!

பருத்திக்கும் பஞ்சுக்கும் பெயர்பெற்ற தங்கள் நாட்டில் பிரபல வர்த்தகத்தொழிலில் சிறப்புற்ற தாங்கள் தற்போது ஸ்ரீ சாரதாமில் நிறுவி, நூலும், துணிகளும் உற்பத்தியாக்குவதில் முயன்று வருவது நாட்டிற்கு நன்மை பயக்கும் என்பதில் ஐயமில்லை. இந்தியக் கைத்தொழிலுக்கும், ஆலைத்தொழிலுக்கும் நற்காலமென்றே சொல்லலாம்.

சென்னிமலைப்போற்றும் செல்வ!

தங்களுக்கிருக்கும் பல்வேறு அலுவல்களுக்கிடையே எங்கள் அழைப்பிற்கிணங்கி இன்று தலைமை வகித்ததற்கு எங்கள் நெஞ்சுகந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். இறைவன் திருவருளால் தங்கள் முயற்சியெல்லாம் ஊதியத்துடன் கைகூடி, தாங்களும், இல்லத்தாரும் எல்லா ஆக்கங்களையும் நிரம்பப்பெற்று நீடூழி வாழவேண்டுமென்று வழுத்துகின்றோம்.

தங்கள் அன்புள்ள,

திரிசிரபுரம்
22—7—1934

டி. வி. கே. நாயுடு,
ஆசிரியர், "வர்த்தக ஊழியன்."

திரிசிரபுரம் "வர்த்தக ஊழியன்" இரண்டாவது ஆண்டுவிழாவில் தலைமை வகிக்கும் கோயமுத்தூர் ஜில்லா, போத்தனூர், ஸ்ரீ சாரதாமில்ஸ், மானேஜிங் ஏஜண்டும், பிரபல பஞ்சுவர்த்தகருமான உயர்திருவாளர்

V. S. செங்கோட்டைய்யா முதலியார் அவர்களுக்கு,

திருச்சி ஜில்லா வியாபாரிகள் சங்கத்தார் அன்புடனளித்த

நல் வரவேற்பு.

அன்புமிக்க அண்ணலே!

வர்த்தகத்திலும், கைத்தொழிலிலும் இம்மாகாணத்தின் தலைநகருக்கு அடுத்துநின்று புராணப் பெருமையாலும், சரித்திரப் பெருமையாலும், பொலிவுபெற்று வெற்றிமாலை சூடிய வீரத்தமிழரசர்களின் ஆட்சி மகிமையும் பெற்று, நீர்வளமும், நிலவளமும் ஒருங்கேயமைந்து, செழித்து விளங்கும் எங்கள் திரிசிரபுரம் தங்கள் வருகையினால் பெரிதும் மகிழ்கின்றது.

வர்த்தக நண்பரே!

எங்கள் சங்கம் 1932-ம் ஆண்டு செப்டம்பர்-மீ 21-ம் நாள்தோன்றி தனித்துநின்ற வர்த்தகர்களை ஒன்றுகூட்டி ஒத்துழைப்பை ஓங்கச்செய்து வணிகர் நலன்களை பெரிதும் மனதிற்கொண்டு சென்னை தென்னிந்திய வர்த்தக சங்கத்துடன் (The Southern India Chamber of Commerce) இணைக்கப்பெற்று இவ்வருடம் ஜூன்-மீ 4வ திருச்சி நகர பரிபாலன சபைத் தலைவராயிருந்த திரு. பி. ரெத்தினவேலு தேவரவர்களின் தலைமையில் முதலாவது ஆண்டுவிழா வெகு சிறப்பாக நடைபெற்றது என்பதை மகிழ்ச்சியுடன் தங்களுக்கு தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

பொதுநலங்கருதும் புண்ணிய!

மேல்நாட்டு வர்த்தகமுறையும், கீழ்நாட்டு வாணிப முறைகளையும் சீர்தூக்கிப்பார்த்து, வர்த்தகர்கள் பத்திரிகைகளின்றிப் பலன்பெற முடியாது என்ற உண்மையைக்கண்டு வர்த்தகர்களுக்கு ஊழியஞ்செய்ய விரும்பி, அப்பெயராலேயே மாதாந்தர பத்திரிகை நடத்தி, ஈராண்டுகளாக வர்த்தகர்களுக்கு, வர்த்தக ஊழியன் பத்திரிகையின் மூலம் அதன் ஆசிரியர் செய்து வரும் உதவியையும், நன்றியையும் நாங்கள் எக்காலத்திலும் மறவோம்.

ஊக்கத்தில் சிறந்த உத்தம!

தாங்கள் இந்திய ஆலைத் தொழில் முன்னேற்றங்கருதி, தங்கள் ஜில்லாவில் ஸ்ரீசாரதா மில்லை நிறுவி, அதன் மூலம் நம் நாட்டு பருத்தியை ஆடையாகச்செய்யும் தங்கள் முயற்சி பெரிதும் பாராட்டத்தக்கதாகும். உங்கள் முயற்சி நன்முயற்சியாகவும், உங்கள் எண்ணம் விரைவில் இனிது நிறைவேறி வெற்றியடையவும், எல்லாம் வல்ல இறைவன் துணைசெய்யும்படியாய் வேண்டுகின்றோம்.

ஏழைகட்கிரங்கும் ஏந்தலே!

தாங்கள் மென்மேலும் புகழ்பெற்று, பலருக்கும் பணிசெய்யும் ஆற்றலையும் பெற்று என்றும் நல்வாழ்வுவாழ வேண்டுமென்று ஆசைப்படுவதுடன், தங்கள் அன்பிற்கு வந்தனமும் கூறுகின்றோம்.

தங்களன்பிற்குரிய,

திருச்சினாப்பள்ளி.
22—7—1934.

திருச்சி ஜில்லா வியாபாரிகள் சங்கத்தின் அங்கத்தினர்கள்.

திரிசிரபுரம் "வர்த்தக ஊழியன்" ஆசிரியர்

— உயர் திருவாளர் —

டி. வி. கே. நாயுடு அவர்களுக்கு,

திருச்சி ஜில்லா வியாபாரிகள் சங்கத்தார் அளித்த

நல்வாழ்த்துப்பத்திரம்.

பொதுநலங்கருதும் புண்ணிய!

வர்த்தக சமுகத்தின் முன்னேற்றங்கருதி சென்ற ஈராண்டுகளாக "வர்த்தக ஊழியன்" என்னும் மாதப்பத்திரிகையின்மூலம் தாங்கள் வர்த்தகர்களுக்கு தொண்டாற்றிவருவதைக்கண்டு நாங்கள் அளவுகடந்த மகிழ்ச்சியடைகிறோம்.

கருணை வள்ளலே!

1932-ம்ஆண்டு செப்டம்பர்-மீ 21-ம் நாள் எங்கள் சங்கம் தோற்றுவிக்கப்பட்ட அன்று முதல் இன்று வரையில் தாங்கள் எங்களுக்குச் செய்துவரும் பேருதவிகளுக்கு நாங்கள் தங்களுக்கு என்றும் நன்றிபாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

சாந்தகுண சீல!

தங்களால் 8—3—33ல் திறந்து வைக்கப்பெற்ற எங்கள் இலவச வாசகசாலை இனிதே நடைபெற்று அதன் மூலம் வர்த்தகர்கள் நலமடைகின்றனர் என்பதையும் தங்களுக்கு தெரிவிக்க விரும்புகின்றோம்.

அன்புநிறைந்த ஆசிரியரே!

தங்களால் ஆரம்பிக்கப்பட்டு வர்த்தக உலகிற்கு ஊழியஞ்செய்துவரும் "வர்த்தக ஊழியன்" நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக, வளர்பிறைச் சந்திரனைப் போல் வளர்ந்து வர்த்தகர்களுக்கு உற்ற தோழனாய் விளங்கிவர எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

வர்த்தக நண்ப!

தாங்கள் இன்னும் நெடுங்காலம் வாழ்ந்து, எங்களோடு ஒத்துழைத்து, "வர்த்தக ஊழியன்" மூலம் இந்திய வர்த்தகத்தை பிறநாட்டு வர்த்தகங்களுடன் தலைசிறந்து விளங்கும்படி செய்ய விரும்புவதுடன், தங்கள் அன்பிற்கு எங்கள் நன்றியறிதலான வந்தனத்தையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

திருச்சினுப்பள்ளி
22—7—1934

தங்களன்பிற்குரிய,
திருச்சி ஜில்லா வியாபாரிகள் சங்கத்தின் அங்கத்தினர்கள்.

"வர்த்தக ஊழியன்" இரண்டாவது ஆண்டு அறிக்கை.

தலைவரவர்களே! நண்பர்களே!

நமது சென்னை மாகாணத்தில் வர்த்தகர்களுக்கென ஒரு தனி பத்திரிகை தோற்றுவிக்கவேண்டுமென்ற அவாவுடைய பல வர்த்தக நண்பர்களின் அபிப்பிராயத்திற்கிணங்க, நமது "வர்த்தக ஊழியன்" 1932-ம் ஆண்டு ஜூலை-மீ'த்தில் ஆரம்பிக்கப்பட்டது. "வர்த்தக ஊழிய"னில் வர்த்தக சம்மந்தமான, பல அரிய விஷயங்களை வெளியிட்டு சென்ற 1933-ம் ஆண்டு ஜூலை-மீ 23உயன்று செட்டிநாட்டு குமார ராஜா திரு. எம். ஏ. முத்தையா செட்டியார் அவர்கள் தலைமையின்கீழ் திருச்சி டவுன் ஹாலில் முதலாவது ஆண்டு விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. "வர்த்தக ஊழியன்" தனது முதலாவது ஆண்டை கடந்து, இரண்டாவது ஆண்டில் வர்த்தகர்களுக்கும், பொதுமக்களுக்கும் இன்றியமையாத கட்டுரைகளுடன் வெளியாகி, தனது இரண்டாம் பிராயத்தையும் இனிதே முடித்து, இன்று கோவை ஜில்லா பிரபல பஞ்சு வர்த்தகரும், போத்தனூர் ஸ்ரீ சாரதா மில்ஸ் மானேஜிங் ஏஜண்டுமான திருவாளர், V. S. செங்கோட்டையா முதலியார் அவர்களின் தலைமையின்கீழ் இரண்டாவது ஆண்டு விழா நடைபெறுகின்றது.

"வர்த்தக ஊழியன்" ஆரம்பித்த நாள்முதல் இதுவரை வர்த்தகர்களுக்கும், பொதுமக்களுக்கும் தொண்டுசெய்வதே தனது முக்கிய நோக்கமாக கருதி, பிரதி இதழிலும் இந்திய நாட்டின் வர்த்தகச் செய்திகளையும் மேல்நாட்டின் வர்த்தக புள்ளி விபரங்களையும் அன்னிய நாடுகளிலிருந்து இந்தியாவிற்கு இறக்குமதி செய்யப்பட்ட சாமான்களின் விபரங்களையும் தென் இந்திய ரயில்வேயில் சாமான்களுக்கு குறைவாக விதிக்கப்படும் கட்டணங்களையும், வர்த்தகம் விருத்தியடைய பல வழிகளையும், சிறிய கைத்தொழில் விபரங்களையும், வெளியிடப்படுகின்றது. சுருங்கக் கூறுமிடத்து "வர்த்தக ஊழியன்" வர்த்தகர்களுக்கு உற்ற தோழனாய் விளங்கிவருவது உலகறிந்த விஷயமாகும்.

நமது பத்திரிகை இரண்டாவது ஆண்டில் மேல்நாடுகளுக்கும் சென்று, அந்நாடுகளிலுள்ள சகோதர வர்த்தக பத்திரிகைகளின் ஆதரவும் பெற்றிருப்பதுடன், அந்நாடுகளிலுள்ள வர்த்தக சங்கங்களால் பேராதரவும் அளிக்கப்பட்டுவருகின்றன. ஆனால் நமது இந்தியாவில் அதிலும் எந்த நாட்டு வர்த்தகர்களின் நன்மையை உத்தேசித்து ஆரம்பிக்கப்பட்டதோ அந்த தமிழ் நாட்டு வர்த்தகர்களிடமிருந்து இன்னும் அதிக ஆதரவு கிடைக்க வேண்டும். ஆனால் முயற்சியுடையார் இகழ்ச்சியடையார் என்ற முதியோரின் வாக்கை அனுசரித்து மிகுந்த சிரமத்துடன் பிரதி மாதமும் குறித்த காலத்தில் நமது பத்திரிகையை வெளியிட்டு கொண்டுவருகிறோம். இதுவரையில் நமது பத்திரிகையை ஆதரித்துவந்த நண்பர்களுக்கு நமது மனமார்ந்த வந்தனத்தை தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

